44962

OL/2024(2025)/12/T-I,II

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

12 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)

ශෛවනෙරි I, II
சைவநெறி I, II
Saivanery I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## சைவநெறி I

**அறிவுறுத்தல்கள் :**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

**1.** பொய்ச்சாட்சி சொன்ன காரணத்தினால் உமாதேவியின் சாபத்துக்கு ஆளாகிய திருமால் சாபவிமோசனம் பெறுவதற்காக மேற்கொண்ட விரதம்
(1) விநாயக சஷ்டி விரதம் (2) ஏகாதசி விரதம்
(3) கேதாரகௌரி விரதம் (4) வரலட்சுமி விரதம்

**2.** காலத்தால் முந்திய இந்திய இசை நூல் எனக் கொள்ளப்படத்தக்க வேதம்
(1) இருக்கு வேதம் (2) யசுர் வேதம் (3) சாம வேதம் (4) அதர்வ வேதம்

**3.** அருச்சுனனுக்கு கிருஸ்ண பரமாத்மாவினால் செய்யப்பட்ட உபதேசமாக விளங்குவது
(1) பகவத்கீதை (2) இராமாயணம் (3) தம்மபதம் (4) மகாபாரதம்

**4.** குமரகுருபரர் சரஸ்வதி தேவியைத் துதித்துப் பாடியருளியது
(1) சரஸ்வதி அந்தாதி (2) சகலகலாவல்லிமாலை
(3) அபிராமி அந்தாதி (4) நவராத்திரிப் பாமாலை

**5.** ஒருவருக்கு 'சிவபுத்திரன்' எனும் தகுதி நிலையை அளிக்கவல்ல தீட்சை யாது?
(1) விசேட தீட்சை (2) நிர்வாண தீட்சை (3) சமய தீட்சை (4) சாதார தீட்சை

**6.** பதினொராம் திருமுறையில் அடங்காதது
(1) பொன்வண்ணத்தந்தாதி (2) திருத்தொண்டர் திருவந்தாதி
(3) திருமுருகாற்றுப்படை (4) திருப்பல்லாண்டு

**7.** "ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்..." எனக் கூறும் நூல்
(1) திருமந்திரம் (2) திருக்குறள் (3) மணிமேகலை (4) சிலப்பதிகாரம்

**8.** ஆலயக் கிரியைகளில் 'பெருஞ்சாந்தி' எனப் போற்றப்படும் கிரியை
(1) கர்ஷணம் (2) பிரதிஷ்டை (3) உற்சவம் (4) பிராயச்சித்தம்

**9.** ஒல்லாந்தத் தளபதியின் மனைவியினது ஆதரவுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆலயம்
(1) பொன்னம்பலவாணேச்சரம் (2) நல்லூர் கந்தசுவாமி கோயில்
(3) வண்ணார்பண்ணைச் சிவன் கோயில் (4) நயினை நாகபூசணி அம்மன் கோயில்

[பக். 2 ஐப் பார்க்க

**10.** நவக்கிரகங்களுள் சாயாக்கிரகங்கள் எனப்படுபவை
(1) சூரியன், சந்திரன் (2) செவ்வாய், புதன் (3) வியாழன், சனி (4) இராகு, கேது

**11.** திருக்கோயில்களில் பிரதிஷ்டா கிரியைகளை நிகழ்த்துவதற்குரியவர்
(1) கோயிற் பரிபாலகர்
(2) பக்தி, அறிவு முதலான ஆசாரிய இலட்சணங்கள் வாய்க்கப்பெற்றவர்
(3) கோயிலை வடிவமைத்த ஸ்தபதி
(4) திருப்பதிகங்களை விண்ணப்பம் செய்வோர்

**12.** திருஞானசம்பந்தரின் நோய் தீர்க்கும் ஜீவசேவையுடன் தொடர்புடைய திருமுறைப்பாடல்கள்
(1) 'செய்யனே திருவாலவாய்', 'இடரினும் தளரினும்'
(2) 'துணிவளர் திங்கள்', 'அவ்வினைக் கிவ்வினை'
(3) 'அத்தி நாத்தி', 'மந்திரமாவது நீறு'
(4) 'வாழ்க அந்தணர்', 'சடையாயெனுமால்'

**13.** திரிகரணங்களாவன
(1) மனம், வாக்கு, காயம் (2) மனம், புத்தி, சித்தம்
(3) மனம், சித்தம், காயம் (4) மனம், புத்தி, அகங்காரம்

**14.** அட்டாங்க யோகக் கூறுகள் அடங்கும் தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) கர்மம், பக்தி, ஞானம் (2) கர்மம், ஆசனம், பிராணாயாமம்
(3) தாரணை, தியானம், ஞானம் (4) ஆசனம், தியானம், தாரணை

**15.** 'தொன்று தொட்டு வரும் அறிவு' என்ற பொருளில் அமைவது
(1) வேதம் (2) ஆகமம் (3) புராணம் (4) தேவாரம்

**16.** சதுரங்க ஷேத்திரம் எனப் போற்றப்படும் ஆலயம்
(1) பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில் (2) இணுவில் கந்தசுவாமி கோயில்
(3) மண்டூர்க் கந்தசுவாமி கோயில் (4) வல்லிபுர ஆழ்வார் கோயில்

**17.** அபரக்கிரியைகளாக அமைவன
(1) மங்கலநாண் பூட்டுதல், அந்தியேஷ்டி, நாமகரணம்
(2) மகாளய பட்சம், திவசம், அன்னப்பிராசனம்
(3) தீவலம் வருதல், சபிண்டீகரணம், மாசிகம்
(4) அஸ்தி சஞ்சயனம், சிராத்தம், வீட்டுக் கிருத்தியம்

**18.** மெய்கண்ட தேவருடன் தொடர்புடைய தொகுதி
(1) சகலாகம பண்டிதர், சிவஞானபோதம்
(2) சிவஞானபோதம், உண்மை விளக்கம்
(3) சுவேதனப் பெருமாள், சிவஞானபோதம்
(4) சகலாகம பண்டிதர், சிவஞானசித்தியார்

**19.** ஆறுமுக நாவலரின் ஆசிரியர்களைக் கொண்ட தொகுதி
(1) செந்திநாதையர், சேனாதிராய முதலியார்
(2) கைலாசபிள்ளை, நல்லூர் சரவணமுத்து உபாத்தியாயர்
(3) சேனாதிராய முதலியார், நல்லூர் சரவணமுத்து உபாத்தியாயர்
(4) கைலாசபிள்ளை, பார்சிவல் பாதிரியார்

**20.** சைவபரிபாலன சபையுடன் தொடர்புடைய தொகுதி
(1) நாவலர் ஆச்சிரமம், இந்து சாதனம், புண்ணிய நாச்சியார் மடம்
(2) சைவாசிரிய கலாசாலை, திருக்கேதீச்சரம், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
(3) சமயப் பரீட்சைகள், கார்த்திகைமட பரிபாலனம், மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம்
(4) தொழிற்பயிற்சிப் பள்ளிகள், இந்து சாதனம், சைவாசிரிய கலாசாலை

[பக். 3 ஐப் பார்க்க

**21.** திருவாசகத்தில் அடங்கும் பதிகங்களாவன
(1) திருஅம்மானை, திருவுந்தியார், திருச்சாழல்
(2) திருப்பல்லாண்டு, அன்னைப்பத்து, சிவபுராணம்
(3) சிவபுராணம், திருவெம்பாவை, திருவிசைப்பா
(4) திருவுந்தியார், திருத்தெள்ளேணம், திருப்பல்லாண்டு

**22.** பஞ்சாங்கத்தில் அடங்கும் உறுப்புக்களாவன
(1) பரணி, சந்திரன், யோகம்
(2) கரணம், நட்சத்திரம், வாரம்
(3) திதி, ஹேது, புதன்
(4) வாரம், திதி, சூரியன்

**23.** ஆடகசவுந்தரி என்ற அரசியின் உடற்குறை நீங்கப்பெற்ற தலம்
(1) கீரிமலை
(2) திருக்கேதீச்சரம்
(3) மாமாங்கேஸ்வரம்
(4) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்

**24.** சம்பந்தரையும் அப்பரையும் தமது இல்லத்துக்கு அழைத்து உபசாரம் செய்யும் வாய்ப்பினைப் பெற்ற நாயனார்
(1) சுந்தரமூர்த்தி நாயனார்
(2) அப்பூதியடிகள்
(3) சேக்கிழார்
(4) குங்கிலியக்கலய நாயனார்

**25.** ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் சிங்கை நகரம் எனச் சுட்டப்பட்டது
(1) கோணமலை (2) மாதோட்டம் (3) வல்லிபுரம் (4) பூநகரி

**26.** இறைவன் 'நிர்விகாரி' எனப்படுவதன் பொருள் யாது?
(1) இறைவன் எவ்வித விகாரமும் அடைவதில்லை
(2) இறைவன் முக்குணங்களையும் உடையவன்
(3) இறைவன் எல்லாம் அறியும் இயல்புடையவன்
(4) இறைவன் சர்வவியாபகம் உடையவன்

**27.** சௌரமானம் என்பது
(1) நட்சத்திரங்களைக் குறிக்கும்.
(2) சந்திரமானத்தைக் குறிக்கும்.
(3) சூரியமானத்தைக் குறிக்கும்.
(4) பஞ்சாங்கம் கணிப்பிடுவதனைக் குறிக்கும்.

**28.** ஒப்புரவு என்பது
(1) தன்னோடு தொடர்புடையவர்களிடத்தில் ஈடுபாடு கொள்வது
(2) நமது கடமைகளில் இருந்து தவறாமல் வாழ்வது
(3) உண்மை பேசி வாழ்வது
(4) மனிதருக்கு உதவி செய்து வாழ்வது

**29.** அனுமானப் பிரமாணத்தின் மூலம் பெறப்படும் அறிவானது
(1) ஐம்பொறிகள் மூலமாக நேரடியாகப் பெறப்படுவது
(2) ஊகத்தின் மூலமாக உணர்ந்து கொள்ளப்படுவது
(3) நூல்கள் மூலமாக அறிந்து கொள்ளப்படுவது
(4) ஞானியர்களால் சொல்லப்படுவது

**30.** இலங்கை நாகதீவு எனப் பெயர் பெறக் காரணமாக அமைவது
(1) ஆதி இலங்கையில் நாகரின் செல்வாக்கு மிகுந்திருந்ததனாலாகும்.
(2) இலங்கையில் நாகவழிபாட்டுக்கான கோயில்கள் காணப்படுவதனாலாகும்.
(3) நாகதம்பிரான் ஆலயங்கள் பற்றிய ஐதிகங்கள் நிலவியதனாலாகும்.
(4) நாகமணிகள் அதிகளவில் கிடைக்கப்பெறுவதனாலாகும்.

**31.** தானம் என்பது
(1) ஒருவர் உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமான ஒன்றை வழங்குவது
(2) எவ்வித பலனையும் எதிர்பாராது மனமகிழ்ச்சியோடு ஏதாவதொன்றினை வழங்குவது
(3) செய்யப்பட்ட உதவிக்கான பிரதியுபகாரமாகச் செய்யப்படுவது
(4) சிவனடியார்க்கு உணவளிப்பது

[பக். 4 ஐப் பார்க்க

**32.** அருளல் என்பது
(1) உயிர்களுக்குத் தனு, கரண, புவன, போகங்களை வழங்குதல்
(2) படைக்கப்பட்டனவற்றை இருக்க வேண்டிய காலம் வரை பாதுகாத்தல்
(3) ஆன்மாக்களைப் பீடித்துள்ள மலங்களின் வீரியத்தைத் தடுத்தல்
(4) ஆன்மாக்களின் மலபந்தங்களை அகற்றிப் பேரின்பத்தைக் கொடுத்தல்

**33.** சுந்தரர் "மீளா அடிமை உமக்கே ஆளாய்" எனும் தேவாரம் பாடிய சந்தர்ப்பமாக அமைவது
(1) சேரமான் பெருமாளுடன் கைலாய யாத்திரை சென்றபோது
(2) ஆற்றில் இட்ட பொன்னைக் குளத்தில் பெற்றுக் கொள்ள முனைந்தபோது
(3) வலக்கண் பார்வை மீளக் கிடைக்க வேண்டியபோது
(4) முத்தி தரும்படி இறைவனை வேண்டியபோது

**34.** "சித்தமும் செல்லா சேட்சியன்" என்று சிவனைப் போற்றியவர்
(1) திருஞான சம்பந்தர் (2) திருநாவுக்கரசர் (3) சுந்தரர் (4) மாணிக்கவாசகர்

**35.** இறைவன் உவக்கும் இன்மலர்களாக சுவாமி விபுலாநந்தர் கூறுவன
(1) ஐம்பொறி அடக்கம், இரக்கம், தவம்
(2) உள்ளக் கமலம், கூப்பியகைக் காந்தள், நாட்டவிழி நெய்தல்
(3) கடமை உணர்வு, சமுதாய உணர்வு, அற உணர்வு
(4) நித்திய கல்யாணி, செம்பருத்தி, ரோசா

**36.** நிராதார தீட்சை என்பது
(1) சகலருக்கும் பிரளயாகலருக்குமானது
(2) சகலருக்கும் விஞ்ஞானகலருக்குமானது
(3) பிரளயாகலருக்கும் விஞ்ஞானகலருக்குமானது
(4) சகலருக்கும் விஞ்ஞானகலருக்கும் பிரளயாகலருக்குமானது

**37.** "நீறில்லா நெற்றி பாழ்" என்று திருநீற்றின் முக்கியத்துவத்தை உணர்த்தியவர்
(1) திருஞான சம்பந்தர் (2) திருவள்ளுவர் (3) சேக்கிழார் (4) ஔவையார்

- மேல்வரும் அட்டவணையில் A இலிருந்து I வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு **38** தொடக்கம் **40** வரையான ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையைத் தெரிவுசெய்க.

| சைவ ஆளுமை | தொடர்புடைய நிறுவனம் | கல்விப்பணி |
|---|---|---|
| A - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் | D - சைவ வித்தியாவிருத்திச் சங்கம் | G - சிவாநந்த வித்தியாலயம் |
| B - இந்து போர்ட் இராசரத்தினம் | E - இராமகிருஷ்ண மிஷன் | H - சைவாசிரிய கலாசாலை |
| C - சுவாமி விபுலாநந்தர் | F - சைவ பரிபாலனசபை | I - சைவப்பிரகாச வித்தியாசாலை |

**38.** இருபதாம் நூற்றாண்டில் பிறந்த சைவசீர்திருத்தவாதியுடன் தொடர்புடைய தொகுதி
(1) AFI (2) BDH (3) BEH (4) CEG

**39.** சைவசித்தாந்த மகாசமாஜத்துடன் நெருங்கிய தொடர்புடைய ஆளுமையுடன் தொடர்புடைய தொகுதி
(1) AEG (2) AEI (3) CDI (4) CEG

**40.** வித்தியானுபாலன அச்சியந்திரசாலையை அமைத்த சைவ ஆளுமையுடன் தொடர்புடைய தொகுதி
(1) AFH (2) AFI (3) BDI (4) BFH

* *

[பக். 5 ஐப் பார்க்க

Downloaded from 'Past Papers Wiki' - Web: www.pastpapers.wiki

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**12 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)

ශෛවනෙරි I, II
சைவநெறி I, II
Saivanery I, II

## சைவநெறி II

✳ **முதலாம், இரண்டாம்** வினாக்கள் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

✳ முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் இரண்டாம் வினா உட்பட ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** மேல்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) வேதங்களைக் குறிப்பதற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(ii) தீபாவளி என்ற சொல்லின் பொருள் விளக்கத்தைக் குறிப்பிடுக.

(iii) அருணகிரிநாதரால் போற்றப்பட்ட ஈழத்துத் திருத்தலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(iv) சிவனடியார்களுக்கு உணவளிக்கும் தொண்டினைப் புரிந்தவர்களாகப் பெரியபுராணத்தில் சுட்டப்படும் ஆண் அடியார்கள் **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக.

(v) சுவாமி விபுலாநந்தரால் இயற்றப்பட்ட நூல்கள் **இரண்டினைப்** பெயரிடுக.

(vi) ஆலயங்களில் நடைபெறும் சித்திரா பௌர்ணமி சிறப்பு வழிபாடுகளில் இடம்பெறும் முக்கிய நிகழ்ச்சிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(vii) "புண்ணியம் செய்வதற்குப் பெருஞ்செல்வம் அவசியமில்லை, எளிமையான வழிமுறைகளே போதுமானது" என்பதற்கு திருமூலர் சுட்டும் எடுத்துக்காட்டுகள் **இரண்டினை** எழுதுக.

(viii) பொலநறுவைக் காலத்துக்குரிய சிங்கள அரசர்களால் அமைக்கப்பட்ட சிவாலயங்கள் **இரண்டினைப்** பெயரிடுக.

(ix) உமாபதி சிவாசாரியார் நிகழ்த்திய அற்புதங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(x) பெரியபுராண திருக்கூட்டச் சிறப்பில் இடம்பெறும் "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்" என்ற பாடலடி புலப்படுத்தும் கருத்து யாது?

**2.** (i) மேல்வரும் பாடல்களுள் **இரண்டினை** அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.

(அ) "குனித்த புருவமும்........"

(ஆ) "பால் நினைந்தூட்டும்........"

(இ) "விநாயகனே வெவ்வினையை........."

(ஈ) "மூவிரு முகங்கள்........"

(உ) "தனம் தரும் கல்வி தரும்........"

(ii) மேலே (i) இல் எழுதிய பாடல்களின் பொழிப்புரையை எழுதுக.

[பக். 6 ஐப் பார்க்க

Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!

**3.** "இன்பமே எந்நாளும் துன்பமில்லை"

- திருநாவுக்கரசர்

(i) ஈகை, ஒப்புரவு ஆகிய சைவ விழுமிய அறப்பண்புகளுடன் முறையே தொடர்புறும் வகையில் அமையத்தக்க திருநாவுக்கரசரின் அற்புதங்கள் **இரண்டு** தருக.

(ii) திருநாவுக்கரசருக்கு சமணர்கள் இழைத்த கொடுமைகள் **மூன்றையும்** அவற்றிலிருந்து மீள்வதற்கு அவர் பாடிய பதிகங்கள் **மூன்றினையும்** குறிப்பிடுக. (பதிகங்களின் தொடக்கப் பாடலடி மட்டும்)

(iii) திருநாவுக்கரசரின் வரலாற்றில் நிகழ்ந்த 'கைலாயதரிசனம்' பற்றிய சம்பவங்களைச் சுருக்கமாக விளக்குக.

**4.** "குணங்கர் ஈண்டிய களத்திடை நணுகியே குமரன் தாள்
வணங்கி மும்முறை புகழ்ந்தனர்"

- கந்தபுராணம் மீட்சிப்படலம்

(i) மீட்சிப்படலம் என்ற பெயர் அமைந்தமைக்கான காரணத்தைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

(ii) கந்தபுராணத்தில் இடம்பெறும் காண்டங்களுள் **மூன்றினைக்** குறிப்பிடுக.

(iii) முருக விரதங்களுள் **ஒன்றினைப்** பற்றிச் சுருக்கமாக விளக்குக.

**5.** "தன்னிலமை மன்னுயிர்கள் சாரத் தரும் சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்" - திருவருட்பயன்

(i) பதியின் இருவகை இலக்கணங்கள் எவை?

(ii) பதியினைச் சாரவிடாது ஆன்மாக்களைப் பீடித்து நிற்கும் ஆணவத்தின் பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக.

(iii) ஆன்ம ஈடேற்றத்துக்கான வழிமுறைகளாக சைவசித்தாந்தம் குறிப்பிடும் சைவநாற்பாதங்கள் குறித்துச் சுருக்கமாக விளக்குக.

**6.** "ஈழத்து நாட்டார் சமய மரபில் ஆண் தெய்வங்களும் பெண் தெய்வங்களும் தனித்துவமான வழிபாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி வழிபடப்படுகின்றன."

(i) நாட்டார் வழிபாட்டு மரபில் இடம்பெறும் ஆண் தெய்வங்கள் **இரண்டினைப்** பெயரிடுக.

(ii) கண்ணகியை நாட்டார் சமய மரபுவழிப்பட்ட நிலையில் பராசக்தியின் அம்சமாகச் சுட்டும் ஈழத்து இலக்கியங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக.

(iii) கண்ணகி அம்மனுக்குரிய சடங்குகளில் இடம்பெறும் பிரதான அம்சங்களைச் சுருக்கமாக விளக்குக.

**7.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) திருமணச் சடங்கு

(ii) திருக்கேதீச்சரம்

(iii) சைவவாழ்வு

(iv) மகோற்சவம்

* * *

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!

PARCEL NO

www.LOL.LK

LOL.lk
BookStore



# විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න



කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර |
A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් |
School Book ගුරු අතපොත්

PADANAMA PUBLICATION | pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම | සතර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා

## සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**